RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1998

OPEN ACCESS

# கலித்தொகையில் மானுட அறங்கள்

பா. சத்யா [அ, *]

[அ] தமிழ்த்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620017, தமிழ்நாடு, இந்தியா

# Human Virtues in Kalitthokai

B. Sathya [a, *]

[a] Department of Tamil, Bishop Heber College, (Autonomous), Tiruchirappalli-620017, Tamil Nadu, India

* Corresponding Author: sathyaias2393@gmail.com

Received: 11-08-2022
Revised: 28-09-2022
Accepted: 13-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

In literature, morality is referred to at several levels. Kalitthokai, one of the Ettutthokai books, deals with the many virtues of life. Helping the poor, hospitality, medicine, and natural ethics are loudly proclaimed to the human race. Many songs show that youth, wealth, body, etc., are not permanent. Like 'Pasumarathani (something learned properly at a young age)', it instills in the mind that living by virtue is the culture and specialty of Tamils. The qualities of the individual and the householder are highlighted. This book is a book that deals with the principles of ethics in a simple way. In the Sangam literature, morality is not insisted upon forcibly, but where necessary it can be seen that moral ideas are suggested in harmony with the theme of the song. Moreover, virtue was codified in harmony with life, and happiness and wealth were regulated to be in harmony with virtue. They convey the ethical thoughts that flow between the songs.

**Keywords:** Kalitthokai, Human Virtues, Books, Songs

## முன்னுரை

கலித்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஆறாவதாக வைத்து எண்ணப்படுகின்றது. ‘கற்றறிந்தார் ஏத்தும் கலி’ என்னும் சிறப்பு பெயரினைக் கொண்டு திகழ்கிறது. மேலும் கலித்தொகை முத்தமிழ் நூலாகவும் திகழ்கின்றது. மானுட இனத்திற்குப் பொதுவான பல உண்மைத் தகவல்கள் கலித்தொகையில் உள்ளன.

மானுட வாழ்விற்குத் தேவையான அறக்கருத்துக்கள் இந்நூலில் மிகுதியாகக் காணப்படுகின்றன. அவை, 1. இளமையும், காலமும் நாள்தோறும் கழியும் இயல்பின, 2. கொடைக்குணம் இல்லாதவனுடைய செல்வம் அவனைச் சேர்ந்தவரைப் பாதுகாக்காது. 3. செல்வம் நிலையில்லாப் பொருள், 4. நிலையாமையை உணர்பவர் கொடைபுரிவர், 5. வறியவனது இளமை சிறப்பை அடையாது, 6. யாவர்க்கும் தீங்கு செய்பவன், இறுதியில் உறவினர் இன்றி நண்பர் இன்றிக்கெட்டு ஒழிவான், 7. முனித யாக்கை பெறுவதற்கு அரியது, 8. நேர்மையற்ற முறையில் பொருள் தேடுவார்க்கு, அப்பொருள் இம்மையிலும், மறுமையிலும் பகையாகும் என்பனவாகும்.

கலித்தொகையில் 236 கருத்துணர் உவமைகள் காணப்படுகின்றன. ஐந்து திணைகளிலும் மானுடர்களின் வாழ்வு விளக்கப்படுவதுடன், உயர்ந்த அறக்கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன. இதனாலேயே இது ‘கல்விவலார் கண்ட கலி’ என்று சிறப்பிக்கப்படுகின்றது.

“கலித்தொகையின் பெருமையை,

திருத்தகு மாமுனி சிந்தாமணி கம்பன்

விருத்தக் கவிவளமும் வேண்டோம் திருக்குறளோ

கொங்குவேள் மாக்கதையோ கொள்ளோம் நனிஆர்வம்

பொங்கும் கலி இன்பப் பொருள்”

என்னும் பழம் பாடல் பகரும் (Backiamary, 2014).

## வறியவர்களுக்கு ஈதல்

தனது வறுமைநிலை காரணமாகக் தன்னிடம் இல்லை என்று வருபவர்களுக்கு இல்லை என்று கூறுவது இழிவு என்னும் அறக்கோட்பாட்டை ப் பின்வரும் பாடலால் அறியலாம்.

“இல் என, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு”

இல்லை என்று வரும் வறியவர்களுக்கு கொடுப்பதே ஈகை, தன் இல்வாழ்க்கையின் அடிப்படை இல்லாதவர்களுக்கு கொடுப்பது அவ்வாறு கொடுக்காமல் இருத்தல் இழிவு என்னும் உயர்ந்த அறக்கோட்பாட்டினை இப்பாடல் நமக்கு உணர்த்துகின்றது (Balasubramanian, 2004)

மேற்குறிப்பிட்ட கலித்தொகையின் உயர்ந்த அறக்கோட்பாட்டினைப் புறநானூற்றின் 204ஆவது பாடலும் உணர்த்துவதை மானுடவியலின் மூலம் அறிய முடிகின்றது.

“ஈ என இரத்தல் இழிந்தன்று, அதன் எதிர்

ஈயேன் அன்றல் அதனினும் இழிந்தன்றி” (Balasubramanian, 2007)

தன் வறுமைநிலை காரணமாக வறியோர்க்கு கொடுக்காமல் இருப்பது மிகவும் இழிவு என்னும் சிறந்த அறக்கோட்பாட்டினைஇ

“பெருக்கத்து வேண்டும் பணிதல்

சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வு”

என்று குறள் உணர்த்துவதை மானுடத்தின் வாயிலாகக் தெளிய முடிகின்றது (Gowmarishwari, 2004).

அதுமட்டும் அல்லது பிறரின் வறுமை நிலையை அவர்தம் மெய்ப்பாட்டினால் குறிப்பாக அறிந்து தானே முன்சென்று உதவுவதுதான் மானுடத்தின் அறம் என்ற அறச்சிந்தனையை பரிபாடல் நமக்கு உணர்த்துகின்றது.

“இல்லது நோக்கி, இனிவரவு கூறாமுன்,

நல்லது வெஃகி, வினை செய்வார்” (Saminathan, 2001)

“ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு

இரவின் இளிவந்தது இல்”

என்னும் பிற இலக்கியங்களும் மானுடர்களின் அறக்கோட்பாடான இரத்தலின் இழிவை எதிர்கால சந்ததிகளுக்கு உறக்கச் சொல்கிறதை மானுடவியலின் வழி நம்மால் உணரமுடிகின்றது (Gowmarishwari, 2004).

## விருந்தினரைப் பேணுதல்

தன் இல்லத்தை நாடி வரும் விருந்தினர்களை முகமலர்ச்சியுடன் பேணி பாதுகாத்தல் வேண்டும் என்ற கருத்தைப் பின்வரும் பாடல் நமக்கு எடுத்துரைக்கின்றது.

"பழிஇன்று,

மன்னவன் புறந்தர வருவிருந்து ஓம்பி"

தன் மனைவி விரும்பியபடி தன்னுடைய இல்லத்திற்கு வரும் விருந்தினர்களுக்கு விருந்தளித்து எந்த ஒரு குறையும், இல்லாமல் முகமலர்ச்சியுடன் சிறப்பாக பேணி பாதுகாத்து இன்பம் அளிப்பதே இல்லறத்தன் சிறப்பு என்றும் அதுவே இல்லறத்தானின் கடமை என்னும் சிறந்தொரு அறக்கருத்துக்களை மேற்கூறிய பாடல் விளக்குவதை மானுடவியலால் அறிய முடிகின்றது (Balasubramanian, 2004). இதனையே,

"வருவிருந்து ஓம்பி" - "வருவிருந்து வைகலும்

ஓம்புவான் வாழ்க்கை பருவந்துப்பாழ்படுதல் இன்று"

என்று திருக்குறளும் பறை சாற்றுகின்றது (Gowmarishwari, 2004). மேலும்,

"விருந்து எதிர்கோடலின், மறப்பல்"

"விருந்து எதிர்கொள்ளவும்"

என்று விருந்து பேணுதல் நம் தமிழரின் பண்பாட்டு மரபுகள் என்றும் விருந்து இல்லற வாழ்வின் சிறப்பிடம் பெறுவது குறித்த மானுட அறச்சிந்தனையை இப்பாடல் புலப்படுத்துகிறது (Balasubramanian, 2004).

விருந்தின் சிறப்பினைச் சிலம்பும் மானுடத்திற்கு வலியுறுத்துகிறது அவை.

"விருந்தெதிர் கோடலின் மறப்பல்" -

"விருந்தொடுபுக்க பெருந்தோட் கணவரொடு, உடனுறைவு மரீஇ ஒழுக்

கொடு புணர்ந்த, வடமீன் கற்பின் மனைஉறை மகளிர்" (Puliyur Kesigan, 2015)

## மரம் அறச்சிந்தனை

மரம் வளர்ந்தால் மழை வரும், மழை வந்தால் விவசாயம் செழிக்கும், விவசாயம் செழித்து வளர்ந்தால் இந்நாடும் ஊரும் செழித்து வளரும் என்பதை உணர்த்த அம்மக்கள் மரங்களை வளர்த்தனர்

"துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்"

நீர்துறைப் பகுதிகளில் ஆலமரமும், மாமரமும் வளர்த்துயிருக்கிறார்கள். அதனை யாரும் வெட்டிவிடக் கூடாது என்பதற்காக அம்மரங்களில் எல்லாம் தெய்வம் உறைவதாகக் கூறி அதனை வணங்கி வழிப்பட்டு இருக்கிறார்கள் (Balasubramanian, 2004).

இவ்வாறு ஒரு நாட்டிற்கு மரம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று உணர்ந்த அம்மக்கள் இனிவரும் சந்ததிகளுக்கு தெய்வ நம்பிக்கை மூலம் அறச்சிந்தனையே, இந்த மானுட சமுதாயத்திற்கு உணர்த்துகிறார்கள்.

சங்க காலத்தில் மரங்களின் முக்கியத்துவம் அறிந்து மக்கள் அதனை யாரும் சேதப்படுத்த கூடாது என எண்ணி மரங்களில் தெய்வம் உறைவதாகக் கூறி அதற்கு மஞ்சள், குங்குமம், பட்டு உடை உடுத்தி வழிப்பட்டதற்கான சான்றுகள் இலக்கியங்களில் மிகுதியாகக் காணப்படுகிறது.

## மருத்துவ அறச்சிந்தனை

ஒருவன் நோயினால் வாட அந்நோயைத் தீர்க்கும் மருந்தை அறிந்த மருத்தவர் தனக்கு அதற்கான தீர்வு தெரியாது என மறைத்தல் மிகவும் தவறானது என்பதனை,

"மருந்து அறை கோடலின் கொடிதே"

என்கிறது கலித்தொகை, மருத்துவர் தான் அறிந்த நோயையும், நோய் தீர்க்கும் முறையையும் மறைத்தல் கூடாது. அவை மற்றவர்களுக்கும் பயன்படுமாறு கூறுதல் வேண்டும் என்னும் மானுடத்தின் அறக்கருத்தைகளை போதிக்கின்றது (Balasubramanian, 2004). மேலும்,

"மருந்தறை கோடல்" - இயைவது கரத்தலிற்

கொடுமை இல்லை"

என்று முதுமொழியும் உரைக்கின்றது (Selvagesavaraya Mudaliar, 1919).

## இல்லற அறம்

இல்லற வாழ்வின் தூய்மை அறங்களைக் கூறுவதில் கலித்தொகைக்கு நிகர் கலித்தொகையே. இல்லறம், அறம், ஆக்கம், காமம் என்பவை இல்லறத்தை நல்லறமாக மாற்றும் சாதனங்களாகும்.

"இளமையும் காமமும் நின்பாணி நில்லா?"

என்னும் பாடல் அடி இளமைலேயே இல்லற வாழ்க்கையைத் தூய்த்தல் வேண்டும், பொருள்களின் மீது நாட்டம் கொண்டு இளமையைத் துறத்தல் கூடாது, பல பொருள்மீது பற்றுக்கொண்டு தம் இளமைக் காலத்தை வீணடித்து. இல்வாழ்க்கையில் இன்பம் பெறாதவர்க்கு இது ஒரு சிறந்த அறக்கருத்துகளாகும் (Balasubramanian, 2004). இல்வாழ்க்கையில் ஈடுபடும் தலைவி தெய்வத்தை வணங்காது கணவனையே தெய்வமாக நினைத்து வாழும் கற்புதிறம் உடைய பெண் மழையே பெய் என்றால் பெய்யும் என்ற அறக்கருத்தை பாலைக்கலியின் பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

"வறன் ஓடின் வையத்து வான் தரும் கற்பினாள்

அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே"

அறங்களிலே தலையானது இல்லறம் (Balasubramanian, 2004). அந்த அறத்தில் கணவனை வழிப்பட்டு அவனின் கருத்திற்கு ஏற்ப இம்மை வாழ்வில் நடந்தால் மறுமை வாழ்வில் இருவரும் சுவர்க்கத்திற்குச் செல்லலாம் என்னும் அரிய கருத்தினை மானுடத்திற்கு எடுத்துரைக்கின்றது. இந்நூல், இக்கருத்தினையே மணிமேகலையின் 16-ஆம் பாடலும் வள்ளுவப் பெருந்தகையின் 55-ஆம் குறளும் பெண்ணின் கற்பின் திறத்தை பெருமையாக உயர்த்திக் காட்டுகின்றது.

## முடிவுரை

சங்ககால மக்கள் அறச்சிந்தனைகளோடு வாழ்ந்து அவ்வறச்சிந்தனையே வருங்கால சமுதாயத்திற்கும் எச்சமாக விட்டுச் சென்றுள்ளன. எதிர்கால சமுதாயத்திற்கு தற்கால சமூகத்தின் மக்களின் 'அறம் சார்ந்த கருத்துக்களை ஏற்காமல் அனைத்தையும் வெகுவாக மறந்தும் அழித்தும் வருகிறார்கள். அதனை மீண்டும் மீட்டெடுத்து நாம் அதனை எதிர்கால சமுதாயத்திற்கு அறம் சார்ந்த கோட்டினை புகுத்தி தம் தமிழரின் பண்பாட்டை நிலை நிறுத்துமாறு செய்தல் வேண்டும். எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய கலித்தொகை வாழ்க்கைக்குரிய பல அறங்களை எடுத்துரைக்கிறது. வறியோர்க்கு உதவுதல், விருந்தோம்பல், மருத்துவம், இயற்கை சார்ந்த அறக்கருத்துகளை மானுட இனத்திற்கு உரக்க பறைச்சாற்றுகிறது. இளமை, செல்வம், யாக்கை போன்றவை நிலையானது இல்லை என்பதைப் பல பாடல்கள் எடுத்துரைக்கின்றன. அறம் செய்து வாழ்தலே தமிழர்களின் பண்பாடும், சிறப்பும் ஆகும் என்பதை 'பசுமரத்தாணி' போல மனதில் பதிய வைக்கிறது. தனி மனிதனுக்கும் இல்லறத்தாருக்கும் இருக்க வேண்டிய பண்புகள் குறித்து எடுத்துக்காட்டப்படுகின்றன. அறக்கோட்பாட்டு கருத்துக்களை எளிமையாகக் கூறும் நூலாக இந்நூல் விளங்குகிறது. சங்க இலக்கியங்களில் அறம் வலிந்து வலியுறுத்தப்படுவதில்லை எனினும், தேவையான இடங்களில் அறக்கருத்துகள் பாடல் கருத்தோடு இயைந்து அறிவுறுத்தப்படுவதைக் காணமுடிகிறது. மேலும் அறம் வாழ்வியலோடு இயைந்ததாக, இன்பமும், பொருளும் அறத்தின்

வழிப்பட்டதாக அமைய நெறிப்படுத்தப்பட்டது. அவை, பாடல்களின் இடையே இழைந்தோடுகிற அறச் சிந்தனைகளை உணர்த்துவதாக உள்ளன.

## References

Backiamary, F. (2014) Vagamai Nokkil Ilakkiya Varalaru, New Century Book House, Chennai, India.

Balasubramanian, K.V. (2004) Kalithogai, New Century Book House, Chennai, India

Balasubramanian, K.V. (2007) Purananuru, Paavai Publications, Thanjavur, India.

Gowmarishwari, S. (2004) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India.

Manimekalai, (2008) Manimekalai Tamil Sollagarathi, Manimekalai pirasuram, Chennai, India.

Puliyur Kesigan, (2015) Silapathikaram, Saradha Pathippagam, Chennai, India.

Saminathan U.V. (2001) Paripadal Urai, Manivasagar Publication, Chennai, India.

Selvagesavaraya Mudaliar, T. (1919) Muthumozhikanchi, Pachaiyappan College, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License